**விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின்**

**செயல்முறை ஆணைகள்.**

**முன்னிலை : மரு.க.பிர்தொளஸ் பாத்திமா, எம்டி., (சித்தா)**

ந.க. அ6/5138/2016

நாள் : 11.05.2024

பொருள்:- கருணை அடிப்படையில் பணிநியமனம் – விருதுநகர் மாவட்ட வருவாய் அலகு – வட்டாட்சியர் அலுவலகம் – விருதுநகர் – முன்னாள் அலுவலக உதவியாளர் – திரு.ஏ.சுப்புராஜ் – பணியின் போது 08.08.2009-அன்று காலமானது அன்னார் மகன் சு.தனக்குமார் - கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிநியமனம் - 24.02.2022 மு.ப. பணியேற்பு செய்தது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 24.02.2022 முற்பகல் பணிவரன்முறை செய்து – ஆணையிடப்படுகிறது.

பார்வை:-

1. அரசாணை (3டி) எண்.12, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு, பணி9(2) பிரிவு, நாள். 22.02.2022.
2. விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.நக.அ6/5138/2016, நாள். 23.02.2022.
3. விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறை ஆணைகள் எண். ந.க.அ/5138/2016, நாள். 23.02.2022
4. அரசுக்கடிதம் எண் 202/2G/5532மனிதவள் மேலாண்மைத் துறை (G) நாள் 20.09.2023
5. அரசுக் கடித (1 டி) எண் 900 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி-9(1) பிரிவு நாள் - 26.12.2023
6. சென்னை கூடுதல் தலைமைச் செயலர் மற்றம் வருவாய் நிருவாக ஆணையர் கடிதம் ஆ.கு3/4600/2024 நாள் 20.02.2024

((((()))))

**ஆணை :-**

விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், விருதுநகர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே கடந்த 08.08.2009 அன்று காலமான திரு.ஏ.சுப்புராஜ் என்பவரின் மகன் திரு.சு.தனக்குமார் என்பவருக்கு , பார்வை 1-இல் காணும் அரசாணையின்படியும் மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையிலும் பார்வை 2-இல் மற்றும் 3-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி, விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியிடம் வழங்கப்பட்டு, 24.02.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 24.02.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட அரசின் ஆணையை பெற்றுத் தரக் கேட்டு, சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதில், கருணை அடிப்படையில், பணிநியமனம் பெற்றவர்களுக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக அரசால் தெளிவுரைகள் வழங்கப்பட்டு , அசல் முன்மொழிவுகள் சென்னை, வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

அதன்படி, பணிவரன்முறை செய்வது தொடர்பாக , பார்வை (6) இல் காணும் கடிதத்தில், பத்தி எண் 6(III)- இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

.IIIபணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும் பணியினை ,ஏனைய விதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் ,பார்வை (4) இல் காணும் அரசுமனித வள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படி , வரன்முறை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்நேர்வில், பார்வை (4) - இல் காணும் கடிதத்தில் பத்தி எண்-3 மற்றும் 5 இல் , பின்வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3) The Services of the Government servents who are appointed or yet to be appointed, on Compassionate Grounds, shall be regularized as per the Tamilnadu Civil Services (Appointment on Compassionate Grounds)Rule, 2023

5) In view of the above rule position, hereinafter relaxation of Tamil Nadu Government Servants (Conditions of Services) Act, 2016 / Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, **2023 shall not be necessitated in respect of minimum age**, married daughter, unmarried brother sister of the unmarried deceased Government servant, to be appointed / appointed prior to commencement of the said Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023.

However, relaxation shall arise to Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023 for application submitted beyond three years, Maximum Age, Alternate application alone."

மேற்காணும் தெளிவுரையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியினை தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 இல் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி பணிவரன்முறை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் செய்த காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் குறும வயதினை நிறைவு செய்யாதிருப்பினும், தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016 மற்றும் தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படை பணிநியமனங்கள்) விதிகள் 2023 ஆகியவற்றில் விதித்தளர்வு பெற வேண்டியதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாற்று விண்ணப்பம், பெரும வயது மற்றும் 3 ஆண்டு கால அளவை தாண்டிய விண்ணப்பங்கள் போன்ற நேர்வுகளில் மட்டுமே அரசிடமிருந்து விதித்தளர்வு பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை .எண் (நிலை)33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு-க்யூ1)த் துறை, நாள் . 08.03.2023 , தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 - இல் பணிவரன்முறை என்னும் தலைப்பில் பின்வருமாறு விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

**16. Regularization of appointments.— Each appointing authority shall regularize the services of the person appointed under these rules within a**

period of one year from the date of his joining service, subject to eligibility.

ஆகவே, பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும் பணியினை ,ஏனைய தகுதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் , தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 - இல் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, நியமன அலுவலரால் , பணிவரன்முறை செய்யப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், பார்வை (1) இல் காணும் அரசாணையின்படி , கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் செய்த நாளில் குறும வயதான 18 வயதினை பூர்த்தி செய்யாததால் தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020-க்கு விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 58-இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016, பிரிவு 20(6)(டி) - ஐ தளர்வு செய்தும் அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளபடியாலும் , மேற்காணும் தெளிவுரைகளின்படி, தனியரது பணியினை, இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியேற்பு செய்த நாளான, 24.02.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

13/05/24

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)
விருதுநகர்

13/05/24

பெறுநர் : தொடர்புடைய நபர்.

நகல்:-

1.தனி வட்டாட்சியர், (ச.பா.தி),
சிவகாசி.
2.அ6 இருப்புக்கோப்பிற்கு